**செய்தி வெளியீடு எண்: 103/2023** **நாள்: 14.09.2023**

**பத்திரிக்கைச் செய்தி**

**நாளை (15.09.2023) மட்டும் மாலை நெரிசல்மிகு நேரங்களில் மெட்ரோ இரயில் சேவை நீட்டிப்பு**

எதிர்வரும் திங்கள்கிழமை (18.09.2023) அன்று விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு அரசு பொது விடுமுறை அறிவிப்பை தொடர்ந்து, சொந்த ஊருக்கு செல்லும் மெட்ரோ இரயில் பயணிகளின் வசதிகாக நெரிசல்மிகு நேரத்தில் இயக்கப்பட்டு வரும் மெட்ரோ இரயில் சேவை, நாளை (15.09.2023) மட்டும் இரவு 10:00 மணி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

நீட்டிக்கப்பட்ட நெரிசல்மிகு நேரங்களில், இரவு 8:00 மணி முதல் 10:00 மணி வரை மெட்ரோ இரயில் சேவைகள் இரண்டு வழித்தடங்களிலும் 9 நிமிட இடைவெளிக்கு பதிலாக 6 நிமிட இடைவெளியில் இயக்கப்படும்.

போக்குவரத்து நெரிசல் மற்றும் சிரமம் இல்லாத பயணத்தை மேற்கொள்ள பயணிகள் மெட்ரோ இரயில் சேவையை பயன்படுத்திக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேற்கண்ட மெட்ரோ இரயில் நீட்டிப்பு சேவைகள் நாளை (15.09.2023) மட்டுமே.

**வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**

**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை – 600 035.**